# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 05.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 11678/D/2019**

_திரு R. ஆறுமுகம் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
வட்டாரக் கல்வி அலுவலர் (பொறுப்பு),
வட்டாரக் கல்வி அலுவலகம், உளுந்தூர்பேட்டை,
விழுப்புரம் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 17.09.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 09.10.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.10.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 18.11.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (05.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. R. ஆறுமுகம் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. ராதாகிருஷ்ணன், வட்டாரக்கல்வி அலுவலர் (பொறுப்பு), வட்டாரக்கல்வி அலுவலகம், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் இன்றைய விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் வட்டாரக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், காட்டு எடையார் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரியும் திரு. T.A. பாலசுப்ரமணியன் அலுவலக குறிப்பு SR பதிவேட்டின்படி பிறந்த நாள், வருடம் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெறும் நாள் பற்றிய விவரம், மேற்படி ஆசிரியர் 2005 ஜனவரி முதல் 2019 வரை பள்ளிகளில் பணியாற்றிய பதவிகள் மற்றும் வருகைப் பதிவேடு குறித்த முழு விவரம், மேற்படி தலைமை ஆசிரியர் 2019 ஜனவரி முதல் செப்டம்பர் 2019 வரை அவர் வாங்கிய சம்பளப் பட்டியல் குறித்த முழு விவரம், உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 11 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (05.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். இன்றைய விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், மேலும், தனது மனுவில் கோரியுள்ள காட்டு எடையார் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் பணியாற்றிய தலைமை ஆசிரியர் அவர்கள் தற்போது எங்கு பணிபுரிந்து எவ்வளவு ஊதியம் பெறுகிறார் என்ற தகவலை பெற்று வழங்குமாறு கோரினார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை உடனடியாக மனுதாரருக்கு வழங்க உளுந்தூர்பேட்டை, வட்டாரக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 11678/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
வட்டாரக் கல்வி அலுவலர் (பொறுப்பு),
உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு R. ஆறுமுகம்,
MS. தக்கா மூலசமுத்திரம் போஸ்ட்,
உளுந்தூர்பேட்டை வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் – 606 107.

Copy to: File
DGPC 10.112020